புதுவை அரசு
வேளாண் & விவசாயிகள் நலத்துறை
அரசு வேளாண் பொறியியல் பணிமனை அலுவலகம்,
நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ் சாலை, புதுச்சேரி -1
=* * * *=

எண்.36/வே.து/அ.வே.பொ.ப/2018-19 புதுவை, நாள் 06-02-2019

## செய்திகுறிப்பு

வேளாண் துறை மூலமாக டிராக்டர் மானியம் பெறுவதற்கான அறிவிக்கை 03.02.2019 அன்று பத்திரிக்கைகள் வாயிலாக வெளியிடப்பட்டது. இம்மானியம் பெற விரும்பும் விவசாயிகள் உரிய விண்ணப்பத்தை அரசு வேளாண் பொறியியல் பணிமனை, வம்பாகீரப்பாளையம், புதுச்சேரி-1 மற்றும் சம்மந்தப்பட்ட உழவர் உதவியகங்கள் ஆகியவற்றில் பெற்றுக்கொள்ளலாம். மேலும் வேளாண்துறையின் இணையதளமான "htpp://agri.puducherry.gov.in"ல் விண்ணப்ப படிவத்தை இணையிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மேலே குறிப்பிட்ட அரசு வேளாண் பொறியியல் பணிமனை அலுவலகத்தில் 04.03.2019க்குள் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நில சான்றிதழ் கிடைக்கப்பெற தாமதமாகும் பட்சத்தில் தற்காலிக ஏற்பாடாக தங்கள் சம்மந்தப்பட்ட உழவர் உதவியகத்தின் வேளாண் அலுவலரின் சான்றோ அல்லது விவசாயத்துறையின் மூலமாக வழங்கப்பட்ட விவசாய அடையாள அட்டையின் நகலையோ இணைத்து விண்ணப்பத்தை சமர்ப்பிக்கலாம்.

தங்கள் விண்ணப்பம் தேர்வு செய்யப்பட்ட உடன் நில உரிமை சான்றிதழ் மற்றும் குடியிருப்பு சான்றிதழ் ஆகியவற்றை துணை தாசில்தார் நிலைக்கு கீழ்ப்படாத வருவாய்த்துறை அதிகாரியிடம் குறிப்பிட்ட காலகெடுவுக்குள் சமர்ப்பிக்கவேண்டும். சமர்ப்பிக்கத்தவறினால் தங்கள் விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என இதன் வாயிலாக தெரிவிக்கப்படுகிறது.

S. Sundar

**துணை இயக்குநர் (வே.பொ.)**
**அரசு வேளாண் பொறியியல் பணிமனை**
**புதுச்சேரி.**